**HMOP No.47/2020**

**Date : 09.06.2022**

**ம.சா.1  சுகன்யாதேவி**

**எ.த.கு.வி**

நானும், எதிர்மனுதாரும் ஒரே ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். நாங்கள இருவரும் பக்கத்து பக்கத்து தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். என்னுடைய பள்ளி பருவம் முதல் எதிர்மனுதாரை எனக்கு தெரியும். நானும், எதிர்மனுதாரும் 1 வருடம் காதலித்து திருமணம் செய்து கொண்டோம். எனக்கும், எதிர்மனுதாருக்கும் 27.03.2018ல் திருமணம் நடைபெற்றது. திருமண தேதிக்கு 7 நாட்களுக்கு முன்னரே நான் எதிர்மனுதாருக்கு வீட்டிற்கு நிரந்தரமாக வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எங்கள் திருமணத்திற்கு என்னுடைய குடும்பத்தார் யாரும் வரவில்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரை திருமணம் செய்தது என்னுடைய பெற்றோருக்கு தெரியாது. எங்கள் திருமணத்திற்கு பின்னர் தான் என்னுடைய திருமண விபரம் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு தெரிந்தது. என் தரப்பிலிருந்து என் சகோதரரோ என்னுடைய குடும்பத்தார் யாரும் திருமணத்திற்கு வரவில்லை. எங்கள் திருமணம் சங்கரன்கோவில் சங்கரநாராயணன் கோவிலுக்குள் உள்ள சண்முகர் சன்னதியில் நடைபெற்றது என்றால் சரிதான். எங்கள் திருமண செலவினை எதிர்மனுதார் குடும்பத்தார் தான் செய்தார் என்றால் சரிதான். எங்கள் திருமணத்தின் பொழுது எனக்கு எதிர்மனுதாரின் பெற்றோர் 10 பவுன் தங்க நகைகள் போட்டார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரின் பெற்றோர் திருமணத்தின்பொழுது எனக்கு 10 பவுன் நகை மற்றும் மோதிரம், கொலுசு போட்டார்கள் என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக அவ்வாறு நகை எதுவும் போடவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுது நான் அணிந்துள்ள செயினும் எதிர்மனுதாரின் பெற்றோர் வீட்டில் எனக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் நாங்கள் எதிர்மனுதாரின் வீட்டில் தான் குடியிருந்தோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் நானும், எதிர்மனுதாரும் அவரது வீட்டில் சந்தோசமாக குடித்தனம் செய்தோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் தினமும் குடித்துவிட்டு வருவார்.

எதிர்மனுதார் திருமண தேதி முதல் தினமும் மது குடிப்பதையே வாடிக்கையாக கொண்டிருந்தார். எனக்கும், எதிர்மனுதாருக்கும் இடையே திருமண தேதி முதல் நாளது தேதி வரை தாம்பத்ய உறவு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் கருவுற்ற உள்ளதாக மருத்துவ சிகிச்சை எடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கருவுற்ற உள்ளதாக சங்கரன்கோவில் அண்ணாமலை மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். நான் கருவுற்றது சம்பந்தமான சிகிச்சைக்கு நானும், எதிர்மனுதாரின் தாயாரும் மருத்துவமனைக்கு சென்றோம். நான் கருவுற்றதாக 3 மாதம் மருத்துவ சிகிச்சை எடுத்தேன். நான் 3 மாத கர்ப்பிணியாக இருக்கும்பொழுது என்னுடைய தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் இறந்த பொழுது, இறுதிசடங்கிற்கு என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். என்னுடன் எதிர்மனுதார் வரவில்லை. என்னுடைய தகப்பனார் இறக்கும் வரை எனக்கும், எங்கள் பெற்றோர் வீட்டிற்கும் பேச்சுவார்த்தை எதுவும் கிடையாது. என்னுடைய தகப்பனார் இறநத வீடடிற்கு சென்ற பொழுது 16 நாட்கள் சாமி கும்பிடும்வரை என்னுடைய பெற்றோர் வீட்டில்தங்கவில்லை. என்னுடைய தகப்பனார் இறந்த தினத்தன்றே செய்முறை செய்துவிட்டு எதிர்மனுதார் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பின்னர் தினமும் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு சென்று 16 நாட்கள் சாமி மட்டும் கும்பிட்டுவிட்டு வருவேன். அந்த 16 நாட்கள் சாமி கும்பிட சென்ற பொழுது தான் என்னுடைய கருவில் இருந்த குழந்தைக்கு துடிப்பு இல்லாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. 16 நாட்கள் சாமி கும்பிட்டு முடித்து 2 வாரங்கள் கழித்து தான் என்னுடைய வயிற்றில் இருந்த கரு துடிப்பு இல்லாமல் ஆனது. என்னுடைய தகப்பனார் இறப்பிற்கு முன்னர் என்னுடைய கருவில் உள்ள குழந்தைக்கு ஸ்கேன் பார்க்கவில்லை. நான் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு 16 நாட்கள் சாமி கும்பிட சென்ற பொழுது என்னுடைய கருவை கலைக்கும் நோக்கில் என்னுடைய தாயார் தவறான உணவு பொருட்களை கொடுத்து அதனால் என்னுடைய கருவிற்கு துடிப்பு இல்லாமல் போனது என்றால் சரியல்ல. அதன்பின்னர் பிப்ரவரி 2019ல் கருவிற்கு துடிப்பு

இல்லை என்பதால் கருக்கலைப்பு செய்துவிட்டேன் என்றால் சரிதான். நான் டிப்ளமோ நர்சிங் படித்துள்ளேன். எதிர்மனுதார் 10ஆம் வகுப்பு படித்துள்ளார். திருமணத்தின் பொழுது எதிர்மனுதார் 4 தறிகள் போட்டு பவர் லூம் வைத்திருந்தார் என்றால் சரிதான். நான் அரசு பணி பெறுவதற்கு எதிர்மனுதாரிடம் ரூ.7,00,000/= தர சொல்லி கேட்டேன் என்றால் சரியல்ல. நான் கேட்டதின்படி எதிர்மனுதார் ரூபாய் 7 லட்சத்தினை என்னிடமும், என்னுடைய தாய் மாமா லட்சுமண பெருமாளிடமும் கொடுத்தார் என்றாலும், அதை நான் தாய் மாமா லட்சுமண பெருமாள் மற்றும் எதிர்மனுதாரின் தந்தை சேர்ந்து சென்னையில் கொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. 2019ஆம் ஆணடு சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் என்னுடைய தாயார் வீட்டிற்கு சென்று வருவதாக கூறி சென்றேன் என்றால் சரியல்ல. 2019ஆம் ஆண்டு சரஸ்வதி பூஜைக்கு 2 வாரங்கள் கழித்து தான் என்னுடைய தாயார் வீட்டிற்கு சென்றேன். எதிர்மனுதார் என்னுடைய கையை முறுக்கி வலி ஏற்படுத்தியது சம்பந்தமாக ராஜபாளையத்தில் உள்ள பத்மா மருத்துவமனையில் ஸ்கேன் எடுத்தேன். ஸ்கேனில் பெரிய அளவில் பாதிப்பு இல்லை என்று 2 நாட்கள் தைலம் கொடுத்தார்கள். நான் கூறுவதுபோல் எதிர்மனுதார் என்னுடைய கையை முறுக்கி வலி ஏற்படுத்தவில்லை என்றும், ஏற்கனவே என்னுடைய கையில் பிரச்சினை உள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என்னை தாக்கியதற்கு நான் ஸ்கேன் எடுத்ததற்கோ அல்லது சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் என் கையை முறுக்கியது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை. குடும்ப சண்டை என்பதால் புகார் அளிக்கவில்லை. 2019ஆம் ஆண்டு சரஸ்வதி பூஜை சமயம் நான் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு சென்றது முதல் தற்பொழுது வரை எதிர்மனுதார் வீடடிற்கு திரும்ப வரவில்லை என்றால் சரிதான். என்னுடைய தாயார் வீட்டிற்கு சென்ற 2 நாட்கள் கழித்து எதிர்மனுதார் என்னுடைய தாயார் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. அதன்பின்னர் ஊர் பெரியவர்கள் மூலம் என்னுடைய தாயார் வீட்டிற்கு பேச வந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என்னை தேடி என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு

வந்த பொழுது என்னுடைய தாயார் எதிர்மனுதாரை திட்டி அடித்துவிட்டார் என்றால் சரியல்ல. ஊர் பெரியவர்கள் பேசிய பொழுது என்னுடைய தாயார் பொருந்தாத திருமணம் என்றும், இனிமேல் சேர வழி இல்லை என்றும் கூறிவிட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் தினமும் குடித்து வந்து என்னிடம் சண்டை போடுவதாகவும் அதற்கு அவரது தகப்பனாரும் உடந்தையாக இருப்பதாக *19.11.2019*ல் சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அந்த புகாரின் பேரில் போலிசார் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். விசாரணையில் எதிர்மனுதாருடன் ஒரு வாரம் வாழ்ந்துவிட்டு வருமாறு கூறினார்கள் என்றால் சரியல்ல. ஆனால் அதை மறுத்து நான் வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் நான் நீதிமன்றம் மூலம் தீர்வு காணுவதாக வாக்குமூலம் அளித்துவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாருக்கு புகை பிடித்தல், புகையிலை, மது பழக்கம் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரை எனக்கு சிறுவயது முதலே நன்கு தெரிநத நிலையில் என்னுடைய ெ பற்றோர் மற்றும் தாய் மாமா பேச்சை கேட்டு எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ மறுத்து பொய்யான சங்கதிகளை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் எந்த காலத்திலும் என்னை அடித்தது கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு எதிர்மனுதார் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். எதிர்மனுதார் தற்பொழுதும், என் மீது பாசத்துடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும், நான் தான் எதிர்மனுதாரை உதாசீனம் செய்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.